தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**

# இயல் விருது விழா 2013

## Lifetime Achievement Award Ceremony 2013

June 28, 2014

Radisson Hotel, Toronto, Canada

## தமிழ் இலக்கியத் தோட்டம் - Tamil Literary Garden

கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டம், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், விமர்சகர்கள், கொடையாளர்கள் ஆகியவர்களின் ஆதரவுடன் 2001ம் ஆண்டு ரொறொன்ரோவில், உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளையாகும். அரிய தமிழ் நூல்களை மீள் பதிப்பு செய்வது, தமிழ், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பை ஊக்குவிப்பது, மாணவர் கல்விக்கு புலமைப் பரிசில் வழங்குவது, தமிழ் பட்டறைகள் ஒழுங்கு செய்வது, கனடிய நூலகங்களுக்கு இலவசமாக தமிழ் நூல்கள் அளிப்பது போன்ற சேவைகள் இதனுள் அடங்கும். இந்த இயக்கத்தின் முக்கியமான பணி வருடா வருடம் உலகத்தின் மேன்மையான தமிழ் இலக்கிய சேவையாளர் ஒருத்தருக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது வழங்கி கௌரவிப்பதாகும். இயல் விருது என்றழைக்கப்படும் இந்த விருது பாராட்டுக் கேடயமும் 2500 டொலர்கள் பணப்பரிசும் கொண்டது.

புனைவு, அபுனைவு, கவிதை, தமிழ் தகவல் தொழில் நுட்பம், மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் வருடா வருடம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்கும் சிறந்த மாணவருக்கு ஆயிரம் டொலர் புலமைப் பரிசிலும் உண்டு. வருடாவருடம் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்துடன் இணைந்து தமிழ் இலக்கியத் தோட்டம் தமிழ் அறிஞர்களின் விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. அத்துடன் மறக்கப்பட்ட நிலையில் உள்ள நாட்டுக்கூத்து போன்ற கலைகளுக்கு புத்துயிரூட்டும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

Founded in 2001, the Tamil Literary Garden is a Toronto based charitable organization committed to promoting the development of literature and studies in Tamil internationally. Its mandate includes awards, creative writing, scholarship to students, translations, book releases, Tamil theatre performances, conferences and workshops. It recognizes that despite the richness and significance of contemporary writing, very little has been done to promote or to celebrate the authors who have made major contributions to Tamil. Among its activities, the event that takes centre stage is a Lifetime Achievement Award, given annually to a writer, scholar, critic or editor, who over a period of time has made very significant contribution to the growth or study of Tamil literature. The Lifetime Achievement Award ( also known as Iyal Virudhu ) consists of a plaque and a cash prize of C$2500.

The Tamil Literary Garden also has instituted other awards: Awards for Fiction, Non-fiction, Poetry, Information Technology in Tamil, Translation and Scholarship to an undergraduate enrolled in a Tamil studies program. It also organizes Tamil Theatre performances (Naddu Koothu) and lecture series in conjunction with the Department of English - University of Toronto.

Tamil Literary Garden
305, Larkin Building
University of Toronto
15 Devonshire Place, Toronto, ON M5S 1H8
Canada
Tel: 905 201 9547
Email:appatlg@gmail.com
Web: www.tamilliterarygarden.com

தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden



**Manuel Jesudasan, Barrister & Solicitor**
**Patron**

## Board of Directors



**Prof. Chelva Kanaganayakam**
**President**



**Appadurai Muttulingam - Writer**
**Secretary**



**N.K. Mahalingam – Writer/ Translator**
**Treasurer**



**Selvam Arulanandam – Editor/ Writer**
**Director**



**Usha Mathivanan – Consultant**
**Director**

தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden

## *Lifetime Achievement Award - 28 June 2014*
## *Programme*

| | |
|---|---|
| RECEPTION | 6.00 - 6.30 |
| AWARDS | 6.30 - 8.30 |

PART 1

Welcome – President
Introduction of Tamil Literary Garden - Patron

PART 2

Fiction Award
Fiction Award
Non-Fiction Award
Poetry Award
Translation Award
Translation Award
Information Technology in Tamil Award
Student scholarship Award
Student scholarship Award

PART 3

CHELVANAYAKAM AWARD

PART 4

Welcoming Theodore Baskaran by Shyam Selvadurai
Introduction and citation by Dr. E. Swarnavel
Presentation of Iyal Award
Rathika Sitsabaiesan MP- award
Acceptance speech by Theodore Baskaran

Vote of thanks

# AWARD RECIPIENTS FOR 2013



## Lifetime Achievement Award

Recipient: **Theodore Baskaran**

*Sponsored by Vaithehi, Balamurugan and Apsara*



## Fiction Award given in honour of Professor Kanapathipillai

Recipient: **Subramania Sritharan for 'Sritharan Kathaikal.'**

*Sponsored by Dr Oppilamani Pillai*



## Fiction Award given in memory of Kirubaharan Sinnadurai

Recipient: **Keeranur Jakir Raja for 'Jinnavin Diary.'**

*Sponsored by Dr.Thushiyanthy and Dr.S.Sriharan*



## Non-Fiction Award given in honour of Mr.T.T. Kanagasunderampillai and the Tamil Teachers of the World

Recipient: **M.Pushparajan for 'Nambikkaikalukku Appaal.'**

*Sponsored by Jay & Lalitha Jayaraman and R.Rabendravarman*



## Poetry Award given in honour of Professor A.W. Mailvaganam

Recipient: **Isai for ' Sivaji Ganesanin Muththangal.'**

*Sponsored by Nandakumar Mailvaganam*



## Translation Award (English to Tamil)

Recipient: **C.Mohan for 'Onai Kulach Chinnam.'**

*Sponsored by Vincent de Paul and Margie*



## Translation Award (Tamil to English) in honour of V T Ratnam

Recipient: **Aniruddhan Vasudevan for 'One Part Woman.'**


*Sponsored by Kumar Ratnam*



## Information Technology in Tamil Award given in honour of Sundara Ramaswamy

Recipient: **Mani Manivannan**

*Sponsored by Sura Memorial Fund Kalachuvadu Trust*



## Scholarship Award to a Student for Outstanding Essay

This award is given in memory of Ranjith Selva
Recipient: **Alina Toporas**

*Sponsored by Bairavee Ranjith*



## Scholarship Award to a Student for Outstanding Essay

Recipient: **Arundathy Rodrigo**
*Sponsored by Bahir Vivekanand B.Sc, D.Ch*



# இயல் விருது

## தியடோர் பாஸ்கரன்

Lifetime Achievement Award
**Recipient: Theodore Baskaran**

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வருடா வருடம் வழங்கும் இயல் விருது இவ்வருடம் (2013)
திரு சு. தியடோர் பாஸ்கரன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவர் எழுத்தாளர், தமிழ் திரைப்பட வரலாற்றாளர் மற்றும் சூழலியல் ஆர்வலர் ஆவர். இந்த விருதைப் பெறும் 14வது ஆளுமை இவராகும்.

தாராபுரத்தில் பிறந்த சு.தியடோர் பாஸ்கரன் சென்னை கிறித்துவக் கல்லூரியில் முதுகலைப்பட்டம் பெற்றார். நாற்பதாண்டுகளாக சுற்றுச்சூழல் பற்றியும், சினிமா பற்றியும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வருகின்றார். இவரது ‘இன்னும் பிறக்காத தலைமுறைக்காக (2006)’, ‘தாமரை பூத்த தடாகம் (2008)’ ‘வானில் பறக்கும் புள்ளெலாம் (2011)’ ஆகிய நூல்கள் இவரை அடையாளப்படுத்தின. உல்லாஸ் கரந்தின் The Way of the Tiger என்ற நூலை ‘கானுறை வேங்கை’ என்ற தலைப்பில்
மொழிபெயர்த்திருக்கின்றார். காட்டுயிர் பற்றி இவர் எழுதிய The Dance of the Sarus 1996இல் வெளிவந்தது. பென்குயின் பதிப்பகம் இவரை தொகுப்பாசிரியராகக் கொண்டு The Sprint of the Blackbuck என்ற நூலை 2009 இல் வெளியிட்டது. தமிழ்நாட்டில் காட்டுயிர் காவலராக பணியாற்றியிருக்கின்றார். இயற்கைக்கான உலக
நிதியகத்தில் (WWF-India) அறங்காவலராக உள்ளார்

1980இல் வெளிவந்த இவரது நூல் Message Bearers தமிழ்த்திரை ஆய்வில் முன்னோடி புலமை முயற்சியாக கருதப்படுகின்றது. தமிழ்சினிமா பற்றிய The Eye of the Serpent நூலுக்காக தேசிய விருதான ஸ்வர்ண கமல் விருதை 1997இல் பெற்றார். இந்நூலின் மொழிபெயர்ப்பு பாம்பின் கண் 2012இல் வெளிவந்தது, இவரது History Through the lens: Perspectives on South Indian Cinema 2009இல் வெளியானது. தமிழில் சினிமா பற்றி **எம் தமிழர் செய்த படம், மீதி வெள்ளித்திரையில், சொப்பனவாழ்வில் மகிழ்ந்தே** ஆகிய நூல்களை எழுதியிருக்கிறார். 2003இல் தேசிய திரைப்பட விருதுகள் தேர்வுக் குழுவில் ஒரு நடுவராக இருந்தார். ஆன் ஆர்பரில் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் தமிழ் சினிமா பற்றி போதித்தார். அத்துடன் சிகாகோ, பிரின்ஸ்டன், ஆஸ்திரேலியன் நேசனல், லண்டன் பல்கலைக்கழகங்கள், பாரிஸ் ப்ரான்லி ம்யூசியம் ஆகிய இடங்களில் உரையாற்றியுள்ளார். ஐ.நா. சபையின் சார்பில் கென்யா நாட்டில் ஆலோசகராக பணியாற்றினார் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றபின், சென்னை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்கு தன்னை அர்ப்பணித்து ஆற்றிய சேவைக்காக திரு தியடோர் பாஸ்கரன் அவர்களுக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக்கான 2013ம் ஆண்டு இயல் விருதை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



**சுப்ரமணிய ஸ்ரீதரன்**
புனைவுப் பரிசு
**ஸ்ரீதரன் கதைகள்**

### Fiction Award given in honour of Professor Kanapathipillai

### Recipient: Subramania Sritharan

கலாநிதி ஸ்ரீதரன், ஈழத்தில் கோண்டாவிலைச் சேர்ந்தவர். இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளராக பணியாற்றிய பின்னர் அமெரிக்காவில் கொலராடோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் நீரியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று, தற்போது ஒஹையோ மாநிலத்தில் அமைந்துள்ள மத்திய மாநிலப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான-பொறியியல் பீடாதிபதியாகப் பணியாற்றுகிறார்.

எழுபதுகளின் ஆரம்ப வருடங்களிலிருந்து தமிழில் எழுத ஆரம்பித்த ஸ்ரீதரனின் கதைகள் ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளான மல்லிகை, அலை, வாரப் பத்திரிகையான திசை மற்றும் இந்தியச் சஞ்சிகையான கணையாழியிலும், லண்டனிலிருந்து வெளியிடப்பட்ட புலம்பெயர்ந்தோர் இலக்கியத் தொகுப்புகளிலும், கனடாவிலிருந்து வெளிவரும் காலம் சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளன. தமிழ்ப் பேராசிரியர் நா. சுப்பிரமணியம், 1978இல், அவரது ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் என்ற நூலில், ஸ்ரீதரன் போன்றோர் தொடர்ந்து எழுதினால், "தரமான" படைப்புகளை எதிர்பார்க்கலாம் என்று சுட்டிக்காட்டியிருந்தார். 1979 டிசம்பர் கணையாழியில் வெளியான 'ஒரு புதிய யுகத்தை நோக்கி' என்கிற ஸ்ரீதரனின் சிறுகதை, சென்னையில் உள்ள இலக்கியச் சிந்தனை குழுமத்தால் அம்மாதத்தின் சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மாதந்தோறும் தெரிவுசெய்யப்பட்ட 1979ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைகளின் 'அற்ப ஜீவிகள்' தொகுப்பிலும், பி.எஸ் ராமையாவின் அக்கதைக்கான விமரிசனத்துடன் பிரசுரமானது.

நண்பர்கள் பத்மநாப ஐயர், கே.கே. ராஜா,
மு. நித்தியானந்தன் ஆகியோரது பலவருட முயற்சிக்குப் பின் கடந்த ஆண்டு 'ஸ்ரீதரன் கதைகள்' நூல் தமிழியல் - காலச்சுவடு வெளியீடாக வெளிவந்துள்ளது.
'வாழ்வின் அபத்தங்களையும் பொய்மைகளையும் துருவித் தேடும் புதிய கருக்களை கூர்மையான விசாரத்துடன் எழுத்தில் வடிக்கும் ஆழ்ந்த எழுத்து இவருடையது' என்று விமர்சகர் பா. ஸ்ரீஸ்கந்தன் இவரது படைப்பைப் பற்றி விவரிக்கிறார்.

ஓர் அற்புதமான கதை சொல்லி என தன்னை நிருபித்துக்கொண்டிருக்கும் திரு ஸ்ரீதரன் அவர்களுக்கு 2013ம் ஆண்டு புனைவுப் பரிசை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

---



**கீரனூர் ஜாகிர்ராஜா**
புனைவுப் பரிசு - நாவல்
**ஜின்னாவின் டைரி**

### Fiction Award given in memory of Kirubaharan Sinnadurai

### Recipient: Keeranur Jakir Raja

தமிழ் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவர் கீரனூர் ஜாகிர்ராஜா. திராவிட இயக்கப் பின்புலம் உள்ள சூழலில் வளர்ந்த காரணத்தால் இளம்பிராயத்திலேயே வாசிப்புக்கு ஏதுவான சூழல் வாய்த்தது. பணிநிமித்தம் தஞ்சாவூருக்கு இடம்பெயர்ந்த போது அங்கு சிறுபத்திரிகைகளுடனான தொடர்பு ஏற்பட்டது. எழுத்தாளர் தஞ்சை ப்ரகாஷ் உடனான அறிமுகம் உலக இலக்கியங்களைத்தேடி வாசிக்க வைத்தது. 1995இல் தனது முதல் சிறுகதையை எழுதினார். இவருடைய படைப்புலகம் எளிய இஸ்லாமிய விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் சார்ந்தது.
கணையாழி, கவிதாசரண் போன்ற இதழ்களில் இவருடைய சிறுகதைகள் தொடர்ந்து வெளியாகின.

'மீன்காரத் தெரு' என்ற இவருடைய முதல் நாவல் இலக்கிய உலகத்தின் கவன ஈர்ப்பை பெற்றது. தொடர்ந்து இவரெழுதிய 'கருத்தலெப்பை', 'துருக்கித்தொப்பி', 'வடக்கே முறி அலிமா', 'மீன்குகைவாசிகள்' போன்ற நாவல்கள் தமிழ்ச்சூழலில் இவருக்கான ஸ்திரத்தன்மையை உருவாக்கித் தந்தன. 'தேய்பிறை இரவுகளின் கதைகள்' என்னும் இவருடைய சிறுகதைத் தொகுதி உயிர்மை-சுஜாதா அறக்கட்டளை விருதுபெற்றது. இஸ்லாமியர் அல்லாத எழுத்தாளர்கள் எழுதிய இஸ்லாமியக் கதைகளை 'காஃபிர்களின் கதைகள்' என்னும் பெயரில் தொகுத்து வெளியிட்டமை இவருடைய முக்கியமான பணி என ஆய்வறிஞர்கள் கருதுகின்றனர்.

'ஜாகீர்ராஜாவின் உரையாடல்கள் மிக இயல்பாக, யதார்த்தமாக, உயிர் சலிப்பதாக இருக்கின்றன' என இவரது எழுத்து குறித்து, சாகித்ய அகாடமி விருதும், கடந்த ஆண்டு இயல் விருதும் பெற்ற தமிழ் எழுத்தாளர் நாஞ்சில் நாடன் மதிப்பிடுகிறார்.

கீரனூர் ஜாகிர்ராஜா அவர்களுக்கு புனைவுப் பிரிவில் அவருடைய ஜின்னாவின் டைரி நாவலுக்கு பரிசு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## மு.புஷ்பராஜன்

அபுனைவுப் பரிசு

**நம்பிக்கைகளுக்கு அப்பால்**

**Non-fiction Award given in honour of Mr.T. Kanagasunderampillai and the Tamil Teachers of the World**

**Recipient: M.Pushparajan**

யாழ்ப்பாணத்திலுள்ள குருநகரில் 1947 இல் பிறந்து இன்று லண்டனில் வாழும் இவர் கலை இலக்கியங்களில் சிறுவயதிலிருந்தே ஆர்வம் கொண்டவர். சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், அரசியல் கட்டுரைகள் என்று எழுதி வருபவர். திரைப்படம், கிராமியப் பண்பாடு ஆகிய துறைகளில் ஈடுபாடுள்ளவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த அலை என்ற சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவர். இன்றும் தமிழகம், புலம்பெயர் இலக்கிய இதழ்களில் எழுதி வருகிறார். இவரது கவிதைகள் ஆங்கிலம், கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மனச்சாட்சியின் கைதியான இவர் நேர்மையும் கொள்கைப் பற்றும் உள்ளவர். வாழ்வுவேறு கலை இலக்கியம் வேறு என்று வாழாத மனிதர். அதேவேளை தன் நம்பிக்கைகளை அசைத்தும் பார்க்கத் தயங்காதவர். அவற்றுக்கும் அப்பால் சென்று விசாரணை செய்யக் கூடிய ஆன்ம வலுவும் உள்ளவர். குருநகர் கடல் தொழிலாளர்களின் வாய்மொழிப் பாடல்களான ‘அம்பா’, ‘மீண்டும் வரும் நாட்கள்’ கவிதைத் தொகுப்பு, ‘வாழ்புலம் இழந்த துயர்’ கட்டுரைத் தொகுப்பு, ‘வலை உணங்கு குருமணல்’ குருநகர் மக்களின் வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வு, ‘நம்பிக்கைகளுக்கு அப்பால்’ என்ற கட்டுரைத் தொகுதி ஆகியவை இவர் எழுதி பெரிதும் பாராட்டுப்பெற்ற நூல்கள்.

‘நம்பிக்கைகளுக்கு அப்பால்’ என்ற தொகுதியில் மு. புஷ்பராஜன் தனது நம்பிக்கைகளையும் அவற்றை அசைக்கும் பிற கருத்துக்களையும் மனதில் வாங்கி அழகான கவிதை மொழியில் எழுதிய பல சிந்தனையை தூண்டும் கட்டுரைகள் அடங்கியுள்ளன. தன் வாழ்க்கையையே கலையாக வாழும் அவர் ஒரு சுய சிந்தனையாளர்.

திரு மு. புஷ்பராஜன் அவர்களுடைய ‘நம்பிக்கைகளுக்கு அப்பால்’ என்ற கட்டுரைத் தொகுதிக்கு 2013 ஆம் ஆண்டு அபுனைவுப் பிரிவில் பரிசு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## இசை

கவிதைப் பரிசு -

**சிவாஜி கணேசனின் முத்தங்கள்**

**Poetry Award given in honour of Professor A.W. Mailvaganam**

**Recipient: Isai**

தமிழ்நாடு, கோயம்புத்தூரில் 1977ஆம் ஆண்டு பிறந்த கவிஞர் இசையின் இயற்பெயர் ஆ.சத்தியமூர்த்தி. பி. ஃபார்மசியும், தமிழ் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலை பட்டமும் பெற்றுள்ள இவர் தமிழ்நாட்டில் கோவை மாவட்டம் இருகூரில் வசித்து வருகிறார். இவரது முதல் கவிதைத்தொகுப்பு ‘காற்று கோதும் வண்ணத்துப்பூச்சி’ 2002 ல் வெளிவந்தது. 2008 ல் ‘உறுமீன்களற்ற நதி’ என்கிற கவிதைத் தொகுப்பும், 2012ல் ‘ சிவாஜி கணேசனின் முத்தங்கள்’ என்கிற கவிதைத் தொகுப்பும் வெளியாகியுள்ளன. ‘அதனினும் இனிது: அறிவினர் சேர்தல்’ என்கிற கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்துள்ளது. ‘அந்தக்காலம் மலையேறிப் போனது’ என்கிற இவரது 4- வது கவிதைத் தொகுப்பு விரைவில் வெளியாகவுள்ளது. ‘கருக்கல்’ என்கிற சிற்றிதழ் வெளியீட்டில் நண்பர்களோடு இணைந்து சில காலம் பணியாற்றியிருக்கிறார்.

‘உறுமீன்களற்ற நதி’ தொகுப்பிற்கு 2009 வருடத்தின் சிறந்த கவிதைத் தொகுப்பிற்கான ஆனந்த விகடன் விருது வழங்கப்பட்டது.

எழுத்தாளர் ஜெயமோகன் கவிஞர் இசையைப் பற்றி இவ்வாறு கூறுகிறார். ‘நேற்றுவரை வழக்கமாக எதையெல்லாம் கவிதை என நினைத்துவந்தோமோ அவை ஏதுமில்லாத அசல் கவிதைகள் இவை. இப்படி புதியதாகப்பிறக்கிறது என்பதே நவீன கவிதையின் சிறப்பியல்பு. இவை ஒரு தருணத்தின் மனநிலையைச் சொல்கின்றன. ஒரு நிகழ்ச்சியைச் சொல்கின்றன. அவை ஏன் கவிதையாகின்றன என்றால் அந்த துளி சொல்லப்படாத ஒரு பெரும் பின்னணியைச் சுட்டி நிற்கிறது என்பதனால்தான்.’

இசை அவர்களுக்கு 2013-ம் ஆண்டுக்கான கவிதைப்பரிசை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது



## சி.மோகன்

மொழிபெயர்ப்பு பரிசு
(ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு)
**ஓநாய் குலச்சின்னம் - நாவல்**

**Translation Award
Recipient: C Mohan**

1952 ஆம் ஆண்டு மதுரையில் பிறந்த சி.மோகன் கடந்த நாற்பது ஆண்டுகளாக இலக்கியம், கலை, சிந்தனை ஆகிய தளங்களில் நம்பிக்கையோடு செயல்பட்டு வருபவர். இவருடைய பார்வைகளும் மதிப்பீடுகளும் தமிழ் இலக்கியச் சூழலில் தொடர்ந்து பாதிப்புகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. படைப்பு ரீதியிலான பார்வைகளையும், சிறுபத்திரிகை இயக்கத்தின் அவசியத்தையும் தொடர்ந்து வலியுறுத்தி வரும் இவருடைய ஆளுமை நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, உரையாடல், நூல் பதிப்பு எனப் பன்முகத் தன்மை கொண்டது.

உலக இலக்கியங்களில் ஆழ்ந்த வாசிப்பு கொண்ட இவர், எழுத்து தவிர, ஓவியம், சிற்பம், திரைப்படம் ஆகிய கலைகளிலும் கவனம் செலுத்தி வருபவர். தமிழ்ப் பதிப்புத்துறையில் இவர் கொண்ட ஈடுபாடு பல சிறந்த புத்தகங்களை உருவாக்கியிருக்கிறது.


**இவருடைய நூல்கள்**

விந்தைக் கலைஞனின் உருவச் சித்திரம் (நாவல்)
ரகசிய வேட்கை (சிறுகதைகள்)
தண்ணீர் சிற்பம் , எனக்கு வீடு நண்பர்களுக்கு அறை (கவிதை)
நடைவழிக் குறிப்புகள், காலம் கலை கலைஞன், சி.மோகன் கட்டுரைகள்
நவீன உலகச் சிறுகதைகள், ஓநாய் குலச்சின்னம் (மொழிபெயர்ப்பு)

கலாச்சாரப் புரட்சியைத் தொடர்ந்து சீனாவில் மேற்கொள்ளப்பட்ட புரட்சிகர நடவடிக்கைகள் மூலம், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவி வந்த மிகவும் தொன்மையானதும், மகத்தானதுமான மேய்ச்சல் நில நாகரிகம் அதற்கடுத்த முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அழித்தொழிக்கப்பட்ட வன்முறையின் வரலாற்றுப் புனைவான 'ஓநாய் குலச்சின்னம்' என்ற இச்சீனநாவல் 2004 ஆம் ஆண்டு வெளியான இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக சீனாவில் 40 லட்சம் பிரதிகள் விற்பனையானது. ஓநாய் குலச்சின்னமானது மேய்ச்சல் நிலத்தின் ஆன்மா. மங்கோலிய மேய்ச்சல் நில நாடோடி மக்களின் ஞான குருவாகவும், போர்க் கடவுளாகவும், மேய்ச்சல் நிலக் காவலனாகவும், குலச்சின்னமாகவும் விளங்கிய ஓநாய்கள் 'புரட்சிகர நடவடிக்கைகள்' மூலம் அழித்தொழிக்கப்பட்டு மேய்ச்சல் நில ஆன்மா சிதைவுற்ற கதை.

2013ம் ஆண்டுக்கான ஆங்கில - தமிழ் மொழி-பெயர்ப்பு பரிசை 'ஓநாய் குலச் சின்னம்' நாவலுக்காக திரு சி.மோகன் அவர்களுக்கு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

---



## அனிருத்தன் வாசுதேவன்

மொழிபெயர்ப்பு பரிசு
தமிழிலிருந்து ஆங்கிலம்
**'மாதொருபாகன்' நாவலின் மொழிபெயர்ப்பு**
**'One Part Woman'**
**Translation Award given in honour of V.T.Ratnam**
**Recipient:
Aniruddhan Vasudevan**

அனிருத்தன் வாசுதேவன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதுகிறார். அவ்வப்போது தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்புகளும் செய்து வருகிறார். இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருமாள் முருகன் அவர்களின் தமிழ் நாவல் 'மாதொருபாகன்' பெங்குவின் பதிப்பகத்தால் 'One Part Woman' என்ற பெயரில் 2013ல் வெளியிடப்பட்டு நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது. அனிருத்தன் தற்போது ஆஸ்டின் நகரத்தில் உள்ள டெக்சஸ் பல்கலைக்கழகத்தில் சமூகமானிடவியல் துறையில் முதுகலை மற்றும் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார். இவர் ஒரு நடன-நாடகக் கலைஞரும் ஆவார்.

பெருமாள் முருகனின் 'மாதொருபாகன்' நாவல் விரிவான கள ஆய்வுகளின் அடிப்படையில் புனையப்பட்டது. சமூக உறவுகள் சார்ந்த குடும்பக் கதையான இந்த நாவல் வட்டார மொழியில் அனைத்து தரப்பு வாசகர்களையும் சென்றடையும் விதத்தில் படைக்கப்பட்டிருக்கிறது. இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது சவாலானது. மொழியின் பண்பாட்டுக்கூறுகளை உள்வாங்காமல் மொழி பெயர்க்கப்படும் படைப்பு வெற்றி பெறுவதில்லை. அனிருத்தன் வாசுதேவனின் மொழிபெயர்ப்பை படிக்கும்போது மொழிபெயர்ப்பு என்ற உணர்வே வராமல், ஒரு மூல நூலைப் படிப்பது போன்றே இயல்பாக உள்ளது. மூல நாவலின் வீச்சும், செழுமையும், அழகும் ஆங்கிலத்தில் சிறப்பாக வெளிவந்திருக்கின்றன. மொழி பெயர்ப்பாளரின் சொல் தேர்வும், அவர் கையாண்ட பிரத்தியேக மொழியும் தமிழ் நாவலின் தொனியை இறுதிவரை காப்பாற்றி இலக்கு மொழியில் வெற்றியை கொடுத்திருக்கிறது.

அதீத கவனத்துடன் மேற்கொண்ட இந்த பணிக்காக அனிருத்தன் வாசுதேவனுக்கு 2013ம் ஆண்டுக்கான தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பு பரிசை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## மணி மணிவண்ணன்

**Information Technology in Tamil Award given in honour of Sundara Ramaswamy**

**Recipient: Mani Manivannan**

மணி மணிவண்ணன் தமிழ் இணையத்தின் முன்னோடிகளில் ஒருவர். இணையத்தில் பல தனியார் தமிழ்க் குறியீடுகளை ஒருங்கிணைத்து முதல் தரமாக உருவான TSCII (Tamil Standard/Specification Code for Information Interchange) என்ற த.கு.தரத்திற்கான அடிப்படைக் குறிக்கோள்களை முன் வைத்து நிறுவிய குழுவில் முக்கியமான பங்காற்றியவர். கணினித் தமிழின் பன்னாட்டு அமைப்பான உலகத் தமிழ் தகவல் தொழில் நுட்ப மன்றம் (உத்தமம்) International Forum for Information Technology (INFITT) என்ற அமைப்பின் நிறுவனர்களில் ஒருவர். இவர், அமெரிக்காவில் உத்தமம் அமைப்பை லாப நோக்கற்ற பன்னாட்டு அமைப்பாகப் பதிவு செய்து, அதன் முதல் பொருளாளராகவும் செயல்பட்டார். கலிஃபோர்னியாவின் ஃபாஸ்டர் சிட்டியில் 2002ல் தமிழ் இணைய மாநாட்டை நடத்தினார். பின்னர் 2012ல் உத்தமத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுத் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலையில் 2012ல் நடந்த தமிழ் இணைய மாநாட்டுக்கும் தலைமை தாங்கினார். தற்போது உத்தமத்தின் இந்தியக் கிளையின் தலைவராகவும், தமிழ் யூனிகோடு பணிக்குழுவின் தலைவராகவும் செயலாற்றி வருகிறார். தமிழக அரசின் தமிழ் யூனிகோடு அறிவுரைஞர் குழுவிலிருந்து அரசின் தரத்தை உருவாக்கியவர்களில் இவரும் ஒருவர். கடந்த 20ஆண்டுகளுக்கு மேலாக உலகெங்கும் கணினித் தமிழைப் பரப்பி வருவதில் ஆர்வத்துடன் செயலாற்றுகிறார்.

சுந்தர ராமசாமி விருதுக்குழுவும் ரொறொன்ரோவின் தமிழ் இலக்கியத் தோட்டமும் தமிழ்க் கணிமைக்கு திரு மணி மணிவண்ணன் அவர்களின் பெரும்பங்களிப்பைப் பாராட்டி அவருக்கு 2013 ம் ஆண்டுக்கான சுந்தர ராமசாமி நினைவு விருதை வழங்குவதில் பெருமையடைகின்றன.

---



## எலினா ரொபோறஸ்

**Scholarship Award to Student for Outstanding Essay**
**Recipient : Alina Toporas**

The Tamil Literary Garden Scholarship was established in order to encourage and promote Tamil Studies in the diaspora, particularly among the second generation. The essay topic for this year is 'New Technologies: Refashioning a Tamil Identity'. The essay presented this year by Alina was well written and was selected by the panel of judges for the award.

Alina Toporas hails from Suceava, Romania (a picturesque area, major tourist attraction due to the numerous monasteries under the UNESCO Heritage and the countless natural wonders). After obtaining her High School diploma in Suceava at Colegiul National "Petru Rares" , she completed her first year education at University of Sheffield, England majoring in International Relations and Politics. In her second year at University at Drexel, Philadelphia, United States she majored in Political Science.

Her accomplishments so far are:
1. Won the Gulen Peace Institute international essay competition on the theme of diplomacy. Consequently, she was awarded in Washington, D.C.
2. Won honorable mention at an UNESCO contest on "The Power of Culture to Create a Better Future".
3. Won essay competition on the recognition of the Armenian Genocide and was awarded in Times Square at the annual commemoration.

Alina's essay will be published in the next issue of 'Kalam' magazine. It is with great pleasure that the Tamil Literary Garden confers the Tamil scholarship award for 2013 to Alina Toporas.



## அருந்ததி (நீட்ரா) ரொட்ரிகோ

**Scholarship Award to Student for Outstanding Essay**
**Recipient : Arundathy (Nedra) Rodrigo**

The Tamil Literary Garden Scholarship was established in order to encourage and promote Tamil Studies in the diaspora, particularly among the second generation. The essay topic for this year is 'New Technologies: Refashioning a Tamil Identity'. The essay presented this year by Nedra was well written and was selected by the panel of judges for the award.

Arundathy was born in Sri Lanka and came to Canada during the civil conflict. She is currently completing her PhD in the Humanities program at York University. Her SSHRC-funded (Social Sciences and Humanities Research Council) dissertation research is on articulations of Tamil refugee identity in Canada. She is a Spoken Word artist who has been featured at Scream in High Park, Desh Pardesh, Masala Mendhi Masti, and the Asian Heritage Festival. Her poetry has been published in various anthologies including Understatement and Shakti Ki Awaaz.

As 'Resident Dissident', she is regularly featured on the Radio Program 'Vibe Collective', where she has been invited to contribute to political debates on topics as diverse as Hip Hop, media representations of the female body, the Caribana festival, Indigenous identity, and the Tamil protests in Canada. Her essays have been published in the International Journal of the Humanities, Global Tensions, Global Possibilities, and Human Rights and the Arts: Essays on Global Asia.

Her translations of the poetry of Cheran, V.I.S. Jayapalan and Puthuvai Ratnathurai are also forthcoming in the collection Human Rights and the Arts in Global Asia.

Arundathy's essay will be published in the next issue of 'Kalam' magazine. It is with great pleasure that the Tamil Literary Garden confers the Tamil scholarship award for 2013 to Arundathy (Nedra) Rodrigo.



**2001ம் ஆண்டு இயல் விருது**

கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்று கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக படைத்து தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராக நின்று வழிநடத்தி தமிழ் பணியாற்றிய திரு சுந்தர ராமசாமி அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2002 ம் ஆண்டு இயல் விருது**

மணிக்கொடி பரம்பரையைச் சேர்ந்தவரும், மூத்த இலக்கியவாதியும், கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தீவிர தமிழ் தொண்டாற்றி வந்தவருமான திரு கே. கணேஸ் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2003ம் ஆண்டு இயல் விருது**

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியம், நாடகம், இசை சினிமா, சிற்பம், ஓவியம் ஆகிய பல துறை எழுத்துக்களில் தீவிரமாக இயங்கிவந்த திரு வெங்கட் சாமிநாதன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2004ம் ஆண்டு இயல் விருது**

ஈழத்து நூற்பதிப்பு துறையில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தீவிரமாக இயங்கி தமிழுக்கு பெரும் தொண்டாற்றிவரும்
திரு இ. பத்மநாப ஐயருக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2005ம் ஆண்டு இயல் விருது**

கடந்த பல ஆண்டுகளாக பழம் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும், கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்துறை தொடங்கி அதில் பேராசிரியராக பணியாற்றியவரும், 2004ல் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டதற்கு காரணமானவருமான திரு ஜோர்ஜ் எல் ஹார்ட்டுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2006ம் ஆண்டு இயல் விருது**

தமிழ் நாடகக் கலைக்காகப் பல ஆண்டுகள் பாடுபட்டு அதை உலக மட்டத்துக்கு உயர்த்தி , நாடகத்துக்கும், தமிழுக்கும், ஈழத்துக்கும் புகழ் சேர்த்துவரும்
திரு தாசீசியஸ் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2007ம் ஆண்டு இயல் விருது**

கடந்த இருபது ஆண்டுகளாக நவீன தமிழ் புனைகதைகள், கவிதைகள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு தமிழின் சிறப்பை உலகறியச் செய்துவரும் ***திருமதி லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம்*** அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கியச் சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




### 2008ம் ஆண்டு இயல் விருது

கடந்த நாற்பது வருடங்களாக தமிழ் எழுத்துலகில் மட்டுமன்றி தன் செயல்பாட்டை பெண்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளுக்கும் விரித்து தன் பதிவுகளை இலக்கியத்துக்கும் அப்பால் கடத்திய அம்பை அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



### 2009ம் ஆண்டு இயல் விருது

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தீவிர சிந்தனையாளராகவும், கோட்பாட்டாளராகவும், திறனாய்வாளராகவும் இயங்கி, நவீன தமிழ் இலக்கியங்களை மார்க்ஸிய நோக்கில் ஆராய்ந்த கோவை ஞானி என்று அழைக்கப்படும் கி. பழனிச்சாமி அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



### 2009ம் ஆண்டு இயல் விருது

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து இவர் நடத்திய ஆராய்ச்சிகளுக்காகவும், தொல் தமிழ் குறித்து தீர்க்கமான முடிவுகளை எட்ட உதவியிருக்கும் கல்வெட்டு ஆராய்ச்சிகளுக்காகவும் திரு ஐராவதம் மகாதேவன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




### 2010ம் ஆண்டு இயல் விருது

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், விமர்சனங்கள், மொழிபெயர்ப்புகள் என தமிழ் இலக்கியத்தின் பல துறைகளில் பங்களித்தவரும், மூத்த இலக்கியவாதியும், ஈழத்து தமிழ் இலக்கியத்தை உலகளாவிப் பரப்புவதில் முன்னிற்பவருமான திரு எஸ்.பொன்னுத்துரை அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



### 2011ம் ஆண்டு இயல் விருது

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், விமர்சனங்கள், நாடகங்கள், குழந்தை இலக்கியம், சினிமா என பல இலக்கிய வகைப்பாடுகளில் இயங்கி, புனைவு இலக்கியத்தின் புதிய வாசல்களைத் திறந்து வாசகர்களுக்கு மகத்தான தரிசனங்களை அளித்தவரும், தமிழுக்கு தன்னை அர்ப்பணித்தவருமான திரு எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



### 2012ம் ஆண்டு இயல் விருது

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், சினிமா என பல இலக்கிய வகைப்பாடுகளில் இயங்கி, புனைவு இலக்கியத்தின் புதிய வாசல்களைத் திறந்து வாசகர்களுக்கு மகத்தான தரிசனங்களை அளித்தவரும், தமிழுக்கு தன்னை அர்ப்பணித்தவருமான திரு நாஞ்சில் நாடன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



### 2013ம் ஆண்டு இயல் விருது

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் விதமாக சுற்றுச்சூழல் பற்றியும், தமிழ் சினிமா வரலாறு பற்றியும் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியதோடு முக்கியமான மொழிபெயர்ப்புகளும் செய்தவர் பல நூல்களை வெளியிட்டவர், நாடு நாடாக பயணம் செய்து உரைகள் நிகழ்த்தியவர் என்ற வகையில் திரு தியோடர் பாஸ்கரன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**Lifetime achievement award sponsored by Vaithehi Balamurugan, MBA, CPA, CFA**

**Vaithehi** is a Certified Public Accountant , CFA charterholder, and Director at Arrowstreet Capital, USA. She is committed to the promotion of Tamil language on an international basis and sponsored the lifetime achievment award from the inception of Tamil Literary Garden.



**Fiction award is given in honour of Professor Kanapathipillai**

Born in 1903, he received his under-graduate and graduate education in Colombo, Sri Lanka, Annamalai, Tamil Nadu, and the University of London, UK. Trained in Tamil, Sanskrit and Pali, he acquired considerable expertise in the field of epigraphy. After completing his doctoral studies under the supervision of Professor Turner, he joined the University of Colombo as lecturer in Tamil, and later became professor.When the University of Peradeniya was established, he became the first Professor and Head of the Department of Tamil, a position he held until 1965. For a brief period, he also served as Acting Vice-Chancellor at the University of Peradeniya. Professor Kanapathipillai is known as a major scholar in epigraphy and linguistics. In addition, he published widely as a novelist, short story writer, and playwright. His plays were performed to much acclaim in Sri Lanka. In addition, he has written a monograph on the history of Sanskrit literature.



The above award is sponsored by **Dr Oppilamani.** After completing his education at Royal College, and the Faculty of Medicine, Colombo, he proceeded to the United Kingdom, where he received a postgraduate degree in Surgery. Having served as a surgeon for several years, he now works in Family Medicine in the UK. His wide-ranging interests have taken him into diverse fields, and his current interests include, Sanskrit, Tamil Literature, Mathematics, and Philosophy.

**Non-fiction award is given in honour of Mr.T.T. Kanagasundarampillai and the Tamil Teachers of the world**.

Mr.T.T. Kanagasundarampillai was born on 24 August 1863 in Trincomalee. At the age of seventeen he left for South India and graduated in English language. He joined Madras Saithapettai English Teachers' Training College as a lecturer. At the same time he served as a Tamil teacher at Madras Christian College and Pachchaiappan College. He was the author of several books. As he had mastered Sanskrit he translated Kishkintha Kandam and Sunthara Kandam of Valmiki Ramayanam into Tamil. He paraphrased several Sangam works and brought many ancient Tamil literatures found in Olai in to print.

The above award is sponsored jointly by Lalitha, Jayaraman, Rabendravarman.



**Lalitha Jayaraman**: A home-maker and international development professional devoted to the family, gender equality, hunger eradication, poverty reduction, and palliative/hospice care issues.

**Venkata Subramanian Jayaraman**: A Chartered Accountant by qualification and profession, who happily strayed into the management of economic and social development projects in poor and disturbed countries.

Both worked for the UN for many years and are happily married and have two daughters and a son, and four grand children. They have deep interest in Tamil language and culture, religion, music, and dance.

**RAJANATHAN RABENDRAVARMAN**



R. Ravi Varman, originally from Sri Lanka, arrived in Canada in June 1993. He is an ardent supporter of Tamil language and culture and is committed to promote the activities of the Tamil Literary Garden and has sponsored the award in the name of Late Mr. Thambimuthu Kanagasundarampillai, an eminent Tamil scholar from Trincomalee.



**Poetry Award is given in honour of Professor A.W. Mailvaganam**

Having graduated at the age of 19, he entered University of Cambridge in 1924 and studied Physics under 9 Nobel Prize winners and founders of modern Physics. He also had the privilege of attending lecture by Albert Einstein in Germany. On his return to Ceylon, after obtaining a first class honors Tripos and M.A and Ph.D from the University of Cambridge was appointed Professor of Physics at the University of Ceylon and subsequently, Dean of the Faculty of Science, Pro-Vice-Chancellor University of Ceylon. He had the privilege of being the first Sri Lankan Professor of Physics. For nearly 50 years he was associated with university teaching and served as chairman on many academic councils and commissions including the University Grants Commission. He was awarded the honorary Degree of Doctor of Science (Honoris Causa) by the University of Jaffna and Colombo. Also, was honored by Her Majesty the Queen Elizabeth II with the O.B.E and by the President of Sri Lanka with the "Vidya Jyothi" awards. Served on the commission appointed by The Ceylon Governor General to report on the feasibility of teaching Science, Medicine, Agriculture and Engineering in Swabasha. He was a member of the Council of the University of Jaffna and also translated to Tamil, Educational Publications, and a number of Physics Text for examinations ranging from the Advanced Level to B.Sc. Special. He also popularized the field of Science in the Tamil media by delivering talks over the Radio and Tamil News Media. He pioneered the Tamil University Movement that led to the establishment of the University of Jaffna and later Eastern University of Sri Lanka. In recognition of his contributions to Physics, the academia in Sri Lanka has established the Mailvaganam Memorial Lecture each year at the Physics Lecture Theatre at the University of Colombo, Sri Lanka.

The above award is sponsored by **Nandakumar Mailvaganam.**



Having graduated with B.Sc (Eng) degree with honors in Sri Lanka ,completed Post Graduate studies at Mc Master University, Hamilton, ON., Canada and received Masters degrees both in Mechanical and Chemical Engineering. He is also a Professional Engineer of the Province of Ontario. Worked in the field of Fire Safety with Office of the Fire Marshal (Ontario) from 1990 and retired from the Public Sector in October 2006. He had the privilege of working with and under guidance of Dr. Joshy Kallungal, an international figure in fire safety. Mr and Mrs Nandakumar are both interested in the arts and committed to the advancement of Tamil.



**Information Technology in Tamil Award is given in honour of Sundara Ramaswamy**

Sundara Ramaswamy began his literary career at the age of 20 by translating a Malayalam novel into Tamil. Following this 'The Story of a Tamarind Tree', his first novel was published and was well received as a work that extended the frontiers of Tamil novel. This was translated into English, Hindi, Malayalam and Hebrew.

His second novel "J.J. Some Notes" defied all the notions prevalent in Tamil writing about form and language. It eschewed narration, brought in a tone of intense meditation on the quality of human life and the problems of remaining human. The third novel Kulanthaikal, Penkal Ankal was written in an entirely new style and language yet retaining a solid texture.

His poems are a severe questioning into one's existence, perceptions, conflicts and tireless but often defeated search. Almost all of Ramaswamy's writings, though reaching limited readership, have sustained serious literary work in Tamil during the last fifty years. He has also contributed significantly to the disciplines of literary criticism and essays and has translated poems from English to Tamil.

He was awarded the prestigious Kumaran Asan Memorial Award for his collection of poems and in 2001 the Tamil Literary Garden of Canada in association with the Centre for South Asian Studies of University of Toronto awarded the Iyal Virudhu.

**The above award is sponsored by Sura Memorial Fund Kalachuvadu Trust.**



**Bahir Vivekanand** is a University of Toronto graduate in Human Biology and Post-graduate in Chiropodial/Podiatric Medicine. He specializes in the area of Biomechanics and Sports Medicine. He has 3 multi-discliplinary clinics in Toronto with a wide base of patients. He is committed to the promotion of Tamil language and culture and his past time includes biking, working out at the gym, and exploring the outdoors. He lives in North York with his fiance Jessica and his 3 beautiful kids, Serena, Ria, and Byran.

**Kirubaharan Sinnadurai** was born in the Trincomalee district of Sri Lanka in the year 1960. He was a student in dentistry in the University when he died. Throughout his short life he was an ardent supporter of Tamil language and culture and committed to its promotion on an international level. An award in Tamil has been set up in his memory. It is sponsored by Dr. Thushiyanthy and Dr.S.Sriharan.




**Sunflowers Furniture** has continued to successfully serve the community for over twenty years. Margie and Vincent de Paul who are responsible for its success have been recognized for their contributions not only within the Tamil community, but also by the country at large. In 2008 the Government of Canada officially included the success story of Sunflowers Furniture in their text book material for new immigrants. The story is cited as an example of how immigrants could successfully begin a new life in Canada.

Over the years, the store has received several awards for its achievements and has been featured in the Toronto Star numerous times. After two decades, Sunflowers continues to support several fundraising events and local initiatives, remaining an integral part of the Tamil business community. Both Margie and Vincent are devoted to the promotion of Tamil language and the Translation Award is sponsored by them.

**Thirumurthi Ranganathan**, Founder & CEO of 'Digital Maxim- a specialty eBooks publisher' from United States is very much passionate about Tamil language. Living in United States for the last 15 years, he has been in constant touch with his roots – Tamil culture, literature, Tamilnadu, and caring about the Tamil community around the world. He is one of the few pioneers, who untiringly works to publish Contemporary and Sangam literature in eBook format both in Tamil for the benefit of immigrant Tamils living around the world, and translated into English for the benefit of 'rest of the world', through his newly founded company Digital Maxim. A sponsorship has been established by him to support the Tamil Literary Garden activities.





**Ranjith Selva** had a love for Tamil literature which came to fruition early in his life. Later when he worked in the Middle East, where he excelled in his banking career he expressed a strong desire with the launch of the Tamil Literary Garden in the year 2001 to work closely with it in the promotion of its work on an international basis. He was in the process of moving to Toronto when he took the initiative to reignite his love of Tamil literature and had made his contributions in various ways. Unfortunately, Ranjith passed away and his involvement with the Tamil Literary Garden ended before it truly began. A legacy that is Ranjith Selva is a legacy that is vibrant and exuberant in its presence. In his loving memory a sponsorship has been established by his daughter, Bairavee Ranjith to honour his commitment and passion for Tamil Literature that has longevity beyond just his lifetime.

Late **Mr. V.T. Ratnam** served in the world of journalism art for over 40 years in Sri Lanka. His life started as a beat-reporter with Eelanadu, Suthanthiran and Thinakaran newspapers then continued as an Editorial Board member of Thinapathi daily until his demise in 1990. Mr. Ratnam also contributed heavily and whole-heartedly towards the enhancement of Tamil culture and Hinduism. As a person who lived in a Colombo suburb cherished with Muslim neighbours, Mr. Ratnam never needed an address to receive mail or visitors. Even today, twenty-three years after his demise, children born after him would take visitors to his house just by asking for "Iya's veedu". It's just a simple evidence for his true embracement of multiculturalism and communal integration. In his loving memory an award for Translation (Tamil to English) has been established by his beloved son Kumar Ratnam to honour his commitment and passion for Tamil Literature.



தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden

இயல் விருது விழா 2012
Lifetime Achievement Award Ceremony 2012

# The award ceremony is sponsored by



**Mr. Manuel Jesudasan** LL.B. of Manuel Jesudasan & Associates, Barristers, Solicitors & Notaries Public is from Sri Lanka. He, Solicitor in England and Wales, and was called to the Law Society of Upper Canada in 1994. He is a general practitioner with main interest in Criminal, Immigration, Real Estate and Estate Law. Mr. Jesudasan was a Senior State Counsel, Legal Advisor and Chief Lands Officer in Seychelles. He has published two books in Tamil , *Thonnuru NadkaLul* and *Vayathu Pathinaru* and is devoted to the promotion of Tamil on an international basis.

**Monica Jesudasan** – Mrs. Jesudasan is a Legal Secretary for the area of Real Estate and assists the Associates as an interpreter in Tamil.

Both Monica and Jesudasan have sponsored the Tamil Literary Garden events regularly from the very beginning.



**Raja Mahendran** B.Sc. Eng. (1983) a graduate of Peradeniya University in Sri lanka, has completed his P.Eng at University of Toronto in 1986 and worked as a consultant until 1993 and established a Tamil newspaper 'Vlambaram' to meet the needs of the people. In 2003 he started a Real Estate Brokerage, ( HomeLife / GTA Realty Inc.) and a Property Development company with a partner.

Raja and his wife **Sathyabama** have sponsored the events of Tamil Literary Garden since its inception.



**Vyramuthu Sornalingam** has been a supporter of Tamil Literary Garden and its activities since its inception. He is committed to the promotion of Tamil language, culture and music.

He conducts regularly Isaikku Ethu Ellai music programmes that have become very popular in Toronto. Mr. Sornlingam is a partner of Yarl Metal Fabrications Inc.

**TamilOnline Foundation Inc. THENDRAL.**

The mission of TamilOnline Foundation, Sunnyvale, California, USA is to provide assistance to Tamil communities (individuals/organizations) to study, preserve and advance Tamil language, education, sciences, traditional arts and cultural heritage. They have pledged support to the Tamil Literary Garden on an annual basis. Our thanks to the Directors of the organization and especially to Thiru C.K.Venkatraman.

தமிழ் இலக்கியத் தோட்டம் **Tamil Literary Garden**

## Advisory Board for Awards Panel

**Mu. Ponnambalam**
*Writer - Sri Lanka*
**Theliwatte Joseph**
*Writer - Sri Lanka*
**Thamizhavan (Carlos Sabarimuthu)**
*Head, Department of Tamil,*
*Dravidian University - India*
**V.N. Giritharan**
*Writer - Canada*
**R. Cheran**
*Assistant Professor, University of Windsor - Canada*
**A.R. Venkatachalapathy**
*Associate Professor, Madras Institute of Development Studies - India*
**V. Arasu**
*Head, Department of Tamil, University of Madras - India*
**Aravindan**
*Writer - India*
**P.A. Krishnan**
*Writer - India*
**Ambai (Dr C. S. Lakshmi)**
*Writer - India*
**Syed Peer Mohammed**
*Writer - Malaysia*
**Sitralega Maunaguru**
*Professor, Department of Tamil, Batticaloa Eastern University - Sri Lanka*
**M.A. Nuhman**
*Head, Department of Tamil, University of Peradeniya - Sri Lanka*
**George L. Hart**
*Head, Department of Tamil, University of California at Berkeley - USA*
**Chelian**
*Poet - Canada*
**A. Muthukrishnan**
*Writer - India*
**Jayanthi Sankar**
*Writer - Singapore*
**P. Karunaharamoorthy**
*Writer - Germany*
**L.Murugapoopathy**
*Writer - Australia*
**P.Ahilan**
*Lecturer, University of Jaffna - Sri Lanka*
**Professor R. S. Sugirtharajah**
*University of Birmingham, U. K*
**M. Pushparajan**
*Writet, poet, U. K*
**A. Kanthasamy**
*Writer, Canada*
**Yuvan Chandrasekar**
*Writer – India*
**Gnanam Lambert**
*Director – Canada*
**Usha Mathivanan**
*Consultant - Canada*
**P.Wickneswaran**
*Director – Canada*
**Maalan Narayanan**
*Editor/ Director - India*

தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**

## SPONSORS

- Ontario Trillium Foundation
- TD Bank Financial Group
- Toronto Arts Council
- RBC Royal Bank
- Fidelity Investments Canada ULC
- Vaithehi, Balamurugan and Apsara
- Sura Memorial Fund Kalachuvadu Trust
- Thendral - TamilOnline Foundation
- Dr. K.O.Pillai
- Dr. George L Hart
- Dr. M.A.Sanjayan
- Param Paramalingam
- Balachandran Muthaiah Professional Corporation
- Lalitha and Jayaraman
- Nandakumar Mailvaganam
- Manuel Jesudasan
- Rajanathan Rabendravarman
- Raja Mahendran
- Bairavee Ranjith and Kumuthini Ranjith
- Jeganathan Balasundaram
- V. Sorna Lingam
- Dr.Thushiyanthy and Dr. S.Sriharan
- Bahir Vivekanand
- Yogi Tambiraja
- Dr. Shan Shanmugavadivel
- N. Murugadas
- Margie and Vincent de Paul
- Simon Archer
- Mr. and Mrs. Aseervatham
- Kumar Ratnam
- Thirumurthi Ranganathan
- Cavinkare, India
- FeTNA - U.S.A
- Pathmini Thiru

## DONORS

- Chelva Kanaganayagam
- Selvam Arulanandam
- N.K.Mahalingam
- A.Muttulingam
- Kula Sellathurai
- Ganesan Sugumar
- P.Kayilasanathan
- Thava Yogarajah
- George Sakthivel
- Tam Sivathasan
- Ilaiyabharathy
- Asan Buhari
- Karu Kandiah
- Shyamohan Mailvaganam
- Sumengale Mailvaganam
- S.Bhrapakaran and Jyothi
- Nanthini Thilleswaran
- Mekala Rajendra
- Gajan Yogaratnam
- V.Ganeshanantham
- Ramachandran Subramanian
- P.Sriskanthan
- Dr.M.Mahendran
- Vive Rasiah
- Jayanthi Shankar
- A. Kanthasamy
- S. Ahileswaran
- Tony Elefteriadis
- S.Kanakaratnam
- Selva Vettyvel
- Anushiya Ramaswamy
- Logan Kanapathi






*With Best Compliments from*

**BALACHANDRAN MUTHAIAH PROFESSIONAL CORPORATION**

Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary
300-2401 Eglinton Ave East
Toronto, Ontario M1K 2M5
Tel - 416 755 5544
Fax - 416 755 5594
Email : balalawoffice@gmail.com

# With Best Compliments From



**Dr. Coomarasamy Kirupananthan**

Obstetrics and Gynecology

Suite 511, 2347 Kennedy Road, Toronto, ON M1T 1T8
Tel: 416 609 1199 Fax: 416 609 2173

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

• Orthodontics • Implants • Cerec Crowns

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

பற்களை ஒழுங்கு செய்தல், இம்பிளான்ற் சிகிச்சை,
ஆகியவற்றில் பல வருட அனுபவமுள்ள
குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit 7**
**Scarborough, ON. M1K 5J8**
**Monday to Saturday**
**Near Kennedy Subway**
**Tel 416 266 5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7– 2575 Danforth Avenue**
**Toronto, ON. M4C 1L5**
**Dr. Shan – Thursday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat)**
**Dr. Brian (Monday) Dr. May (Wednesday)**
**Tel 416 690 0121**